| O.S.No. 164/2022 | PW2: திரு.ராமமூர்த்தி த/பெ. திரு.துரைசாமி | 27-02-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. 1–ம் பிரதிவாதி ரங்கநாதன் எனது மாமனார். அவருக்கு எனது மனைவி அமுதா, 2, 3 பிரதிவாதிகள் ஆகியோர் பெண் வாரிசுகள் என்றால் சரிதான், ஆண் வாரிசுகள் இல்லை. 1–ம் பிரதிவாதியினுடைய தகப்பனார் பெயர் முத்தப்பிள்ளை, தாயார் பெயர் அலமேலு அம்மாள். முத்தப்பிள்ளைக்கு 1–ம் பிரதிவாதி, முனியம்மாள், தனபாக்கியம், கண்ணம்மாள், எல்லம்மாள் ஆகியோர் வாரிசுகள் ஆகும். வழக்கு சொத்தில் பாகம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன். 1–ம் பிரதிவாதியினுடைய சொத்திலும், 1–ம் பிரதிவாதியினுடைய மனைவியினுடைய சொத்திலும் எனது மனைவிக்கு பாகம் உண்டு என்ற அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

2. வழக்கு சொத்துக்கள் எனது மாமனார் ரங்கநாதன் பெயரில் உள்ள சொத்துக்கள் என்றால் சரிதான். முத்தப்பிள்ளையின் மனைவி அலமேலு அம்மாள் 1–ம் பிரதிவாதி ரங்கநாதன் பெயரில் உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த உயிலை என்னிடம் காண்பிக்காததால் நான் படித்து பார்க்கவில்லை. பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் அந்த உயில் பற்றி சொல்லியுள்ளார்களா என்றால் இல்லை, ஆனால் என் மாமனார் அந்த உயில் எழுதியது பற்றி சொல்லியுள்ளார். அந்த உயிலில் அலமேலு அம்மாளின் காலாந்திரத்திற்கு பிறகு ரங்கநாதன் அடைய வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான், ஆனால் எனக்கு அந்த உயிலை பற்றி தெரியாது. வில்லங்கம் போட்டு உயில் பற்றி பார்த்தீர்களா என்றால் இல்லை.

3. அலமேலு அம்மாள் எப்போது இறந்தார் என்றால் நான் சிறுவயது இருக்கும்போது இறந்துவிட்டார். எனக்கு தற்போது 62 வயதாகிறது. அலமேலு அம்மாள் இறந்து ஏறக்குறைய 50 ஆண்டுகள் இருக்கும் என்றால் சரியாக தெரியவில்லை. அலமேலு அம்மாள் இறந்தபிறகு உயிலில் கண்டுள்ள சொத்தினை 1-ம் பிரதிவாதி அடைந்து அனுபவித்து வந்தார் என்றால் இல்லை, நான், என் மனைவி, என் மாமனார் என மொத்தமாக அனுபவித்து வந்தோம். உயிலில் கண்டுள்ள சொத்துக்களுக்கான பட்டா 1-ம் பிரதிவாதி பெயரில்தான் உள்ளது. அந்த உயில் எழுதியது பற்றி முனியம்மாள், தனபாக்கியம், கண்ணம்மாள், எல்லம்மாள் ஆகியோருக்கு தெரியாது. முனியம்மாள், தனபாக்கியம், கண்ணம்மாள், எல்லம்மாள் ஆகியோர் இறந்துவிட்டார்கள். மேற்படி நால்வரும் உயிரோடு இருக்கும்போது 1-ம் பிரதிவாதி ரங்கநாதன் பெயரில் ஏதேனும் வழக்கு தாக்கல் செய்துள்ளார்களா என்றால் அது எனக்கு தெரியாது.

4. அலமேலு அம்மாள் உயில் எழுதி வைத்த விஷயம் அவரது மகள்களுக்கு நன்கு தெரியும் என்றாலும், அதனால்தான் அவர் உயிருடன் இருக்கும் வரையில் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி நான்கு பேரும் 1-ம் பிரதிவாதி தாவா சொத்தினை அனுபவித்ததை தடை செய்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. அலமேலு அம்மாள் 1-ம் பிரதிவாதிக்கு உயில் மூலமாக 4 ஏக்கருக்கு மேல் எழுதிக்கொடுத்துள்ளார். உயிலில் கண்டுள்ள சொத்துக்கள் புதூர் கிராம எல்லையில் உள்ளது. அது இல்லாமல் 1-ம் பிரதிவாதி எத்தனை ஏக்கர் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் அவர் 1 சென்ட் கூட கிரையம் வாங்கவில்லை.

5. உயில் சாசனத்தில் கண்டுள்ள சொத்துக்கள் 1–ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து, அந்த சொத்தில் எனது மனைவிக்கோ, மற்ற வாரிசுகளுக்கோ எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ரங்கநாதன்தான் வழக்கு சொத்தின் உரிமையாளர் என்ற முறையில் அனுபவித்து வருகிறார் என்றாலும், நாங்கள் கூட்டாக அனுபவித்து வருகிறோம் என்று பொய் சொல்கிறோம் என்றாலும் சரியல்ல.

6. ரங்கநாதனின் மனைவி லீலா பெயரில் 1 ஏக்கர் 20 சென்ட் நிலம் உள்ளது. அந்த சொத்தினை ரங்கநாதனின் மனைவி லீலா கிரையம் வாங்கவில்லை. ரங்கநாதனின் தகப்பனார் முத்தப்பிள்ளைக்கு சொந்தமான சொத்து லீலாவுக்கு பரிவர்த்தனை மூலமாக கிடைத்தது. பரிவர்த்தனை மூலமாக கிடைத்தது என்று சொல்வதற்கு அதற்கான பத்திரத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை.

7. எந்த சொத்து லீலாவுக்கு பரிவர்த்தனை மூலமாக கிடைத்தது என்றால் சீனிவாச முதலியார் சொத்தாகும். அந்த சொத்தும் 1–ம் பிரதிவாதிக்கு முத்தப்பிள்ளையின் குமாரர் என்ற முறையில் உரிமையானது என்று சொன்னால் சரியல்ல. அந்த சொத்தையும் 1–ம் பிரதிவாதிதான் அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை, மொத்தமாகத்தான் அனுபவித்து வருகிறோம். தாவா 15 மற்றும் 16 அயிட்ட சொத்துக்கள் முத்தப்பிள்ளைக்கு உரிமையான சொத்துக்கள் ஆகும். முத்ததப்பிள்ளையின் காலாந்திரத்திற்கு பிறகு 1–ம் பிரதிவாதிதான் அச்சொத்தினை அனுபவித்து வருகிறோம் என்றால் இல்லை, கும்பலாகத்தான் அனுபவித்து வருகிறோம். அந்த சொத்துக்கான பட்டா 1–ம் பிரதிவாதி பெயரில் உள்ளது.

8. நான் தற்போது பாப்பாந்தாங்கல் புதூரில் விநாயகர் கோயில் தெருவில் வசிக்கிறேன். நான் தற்போது வசிக்கும் வீடு எனது தகப்பனார் விட்டுச் சென்ற சொத்து என்றால் இல்லை, எனது தாயாரின் சொத்தாகும். எனக்கு விவரம் தெரிந்த காலம் முதல் அந்த வீட்டில்தான் நாங்கள் வசித்து வருகிறோம். நான் 01.07.1987-ல் 1-ம் பிரதிவாதியின் மகள் அனுதாவை நான் திருமணம் செய்து கொண்டேன். 2-ம் பிரதிவாதி கிரிஜாவை செய்யாலு தாலுக்காவில் உள்ள பல்லி கிராமத்தில் திருமணம் செய்து கொடுத்தார்கள். 3-ம் பிரதிவாதி ராதிகாவை வேலூரில் திருமணம் செய்து கொடுத்தார்கள்.

9. தற்போது 1-ம் பிரதிவாதியுடன் 2, 3 பிரதிவாதிகள் இருந்து வருகிறார்கள். என் மனைவி உயிரோடு இருக்கும்போதே 1-ம் பிரதிவாதிக்கும் எனக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரியல்ல, நன்றாகத்தான் பேசிக்கொண்டிருந்தோம். 1-ம் பிரதிவாதியை வயதான காலத்தில் நானோ, எனது மனைவியோ எவ்வித சவரட்சணையும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகள்தான் 1-ம் பிரதிவாதிக்கு உடனிருந்து சவரட்சணை செய்து வருகிறார்கள் என்றால் இல்லை. இன்றைய தேதி வரையில் வழக்கில் கண்டுள்ள சொத்துக்கள் 1-ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றாலும், அதனை பொறுத்து எந்தவித ஏற்பாடும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் 1-ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றாலும், அதனை எவருக்கும் பாராதீனம் செய்ய அவருக்கு உரிமை உண்டு என்றாலும், தாவா சொத்துக்களில் நாங்கள் எவ்வித பாக உரிமையும கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல.

10. என் மனைவிக்கே வழக்கு சொத்தில் பாகம் இல்லாத நிலையில் நான் எந்த பாகமும் கோரமுடியாது என்றால் சரியல்ல. அதனால், நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u> : இல்லை.

ஒம்/- ராமமூர்த்தி

சாட்சியின் கையொப்பம்

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.27 14:26:02 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**